1981 மார்ச் 7]

சந்தன மரங்களைப் பாதிக்கும் ''ஸ்பைக்'' வியாதி.

*வினா எண் 419—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு செய்தி-அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ''ஸ்பைக்'' வியாதியினால் வனத்துறையிலுள்ள சந்தன மரங்கள் அழிந்து வருவது உண்மையா?

(ஆ) ஆம் எனில், மேற்படி வியாதி பரவுவதைத் தடுக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: (அ) மற்றும் (ஆ): ஆம். சந்தன மரங்கள் ஓரளவுக்குப் பாதிக்கப்படுவது உண்மை. இந்த வியாதியைப் பற்றிய தன்மைகளைக் கண்டறியவும் இதனைக் கட்டுப்படுத்தவும் பெங்களூரிலுள்ள சந்தன மர ஆராய்ச்சி நிலையம் ஆராய்ச்சி செய்து வருகிறது. இந்த ஆராய்ச்சிக்கு வேண்டிய உதவிகளை அரசு அளித்து வருகிறது.

திரு. இரா. தாமரைக்கனி: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ''ஸ்பைக்'' வியாதியினால் சந்தன மரங்கள் பாதிக்கப்பட்டு, அந்த சந்தன மரத்தில் இருந்து தயாரிக்கப்படுகின்ற சோப்பினை உபயோகப்படுத்தினால் அதன் மூலம் பெரும் வியாதிகள் வருவதாகச் சொல்லப்படுகிறதே அது அரசுக்குத் தெரியுமா? மேலும், இந்த சந்தன மரங்களைப் பராமரிப்பதற்கு அதிக நிதி தேவைப்படுகிறது. அவைகளை ஏற்றுமதி செய்வதை மத்திய அரசு தடை விதித்திருக்கிறது, அதனால், நமக்கு வருவாய் இழப்பு ஏற்பட்டிருக்கிறது. எனவே, மீண்டும் இவைகளை வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்வதற்கு நமது அரசு மத்திய அரசுக்குக் கோரிக்கை விடுக்குமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, 4, 5 கேள்விகளைக் கேட்டிருக்கிறார்கள். இந்த நோயின் மூலம், அந்த மரத்திலே இருந்து தயாரிக்கப்படுகிற சோப்பைப் பயன்படுத்துவதன் மூலம் நோய்கள் வருகின்றன என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு அபாயகரமான செய்தியை வெளியிட்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட தகவல் இதுவரையில் இல்லை. அது மரத்தைப் பாதிக்கின்ற நோயே தவிர, மனிதர்களைப் பாதிக்கின்ற நோய் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, ஏற்றுமதியைப் பற்றி இங்கே தெரிவித்தார்கள். அது மத்திய அரசு கடந்த ஆண்டிலே இருந்து முழுமையாக ஏற்றுமதிக்குத் தடை விதித்திருக்கிறார்கள். அதனாலே பெரிய வருவாய் இழப்பு ஏற்பட்டிருக்கிறது, அதனாலே மத்திய அரசின் இடத்திலே மாநில அரசு இந்த ஏற்றுமதித் தடையை நீக்கவேண்டுமென்று வற்புறுத்தி வருகிறது.

திரு. இரா. தாமரைக்கனி: தலைவர் அவர்களே, சந்தன மரங்களைத் திருடும் கூட்டத்தைப் பிடிக்கும்போது வனத்துறை பாதுகாப்பாளர்கள், அவர்களால் தாக்கப்பட்டு இறந்தும் விடுகிறார்கள். அந்த நிலையைப் போக்க, வனத்துறை பாதுகாப்பு அதிகாரிகளுக்கு வாகன வசதி, துப்பாக்கி, காட்டுக்குள் வீடு, போலீஸ்காரர்களுக்கு அளிக்கப்படுகின்ற சலுகைகள் இவைகளைக் கொடுக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, சந்தன மரங்களைப் போன்ற விலை உயர்ந்த மரங்களைக் கடத்துவதை, திருடுவதைத் தடுப்பதற்கு வனத்துறை பெரிய அளவில் முயற்சி எடுத்து வருகிறது. பாதுகாப்பு பணிக்கு மேலும், அலுவலர்களை நியமிக்கவும், அவர்களுக்கு ஆயுத உதவிகள் வழங்கவும், அதற்காக வாகன வசதிகளை வழங்கவும், அரசிடத்திலே வனத்துறை பொருளாதார உதவியைக் கேட்டுக்கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[முற்பகல் 9.30]

திரு. பெ. சு. திருவேங்கடம்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த 'ஸ்பைக்' நோய் எந்தெந்த மாவட்டங்களில் உள்ள சந்தன மரங்களைப் பாதித்து இருக்கின்றன? எந்தெந்த மாவட்டங்களில் அது இருக்கிறது, எவ்வளவு காலத்திற்கு இருக்கிறது? அதைத் தடுக்க அரசாங்கம் வேறு முறைகளில் நடவடிக்கை மேற்கொண்டுள்ளதா, அல்லது அந்த ஆராய்ச்சி முடிந்த பிறகு தான் நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நோய் பரவலாகத் தமிழ் நாட்டிலே இப்போது இல்லை. குறைந்து கொண்டு வருகிறது என்ற தகவல் தரப்பட்டு இருக்கிறது. அதிலும் குறிப்பாக ஜவ்வாது மலைப் பகுதியில் இது இருப்பதாகத் தெரிகிறது. அந்த நோய்க்கான காரணத்தைச் சரியாகக் கண்டுபிடிக்கவில்லை. எனவே தீவிரமான தடுப்பு நடவடிக்கைகள் எடுக்க முடியவில்லை. என்றாலும், இப்போது பெங்களூரில் நடக்கும் ஆராய்ச்சி மூலம் விரைவில் இதனுடைய அடிப்படையை அறிந்து, அந்த நோய் ஏற்படாமல் தடுக்கும் முயற்சியை அரசு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. செ. சிவசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, சந்தன மரத்திற்கு வரும் நோய் பற்றிய ஆராய்ச்சி நடந்து வருவதாக அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். காலையிலே இருந்து இந்தச் சட்டமன்றப் பேரவையில் சந்தனம், மல்லிகை, ரோஜா

1981 மார்ச் 7]

போன்ற கேள்விகள் மூலம் வாசனை அடித்துக்கொண்டு இருக்கிறது. ஆகவே. சந்தனத்தில் இருந்து வாசனைத் திரவியம் எடுக்கும் ஆராய்ச்சியை நடத்த அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சந்தனத்தை மணக்க வைக்க ஆராய்ச்சி தேவை இல்லை. சந்தனம் இருந்தாலே மணக்கும்.

திரு. கே. எம். எஸ். சுப்பிரமணியம்: பேரவைத் தலைவர் அவர்களே, சந்தன மரங்கள் எந்தப் பகுதியில் அதிகமாக இருக்கின்றன? புதிதாகச் சந்தன மரங்களை வளர்க்க அரசிடம் திட்டம் உள்ளதா? பல பாரஸ்டுகளை வீணான முறையில் மற்றவர்கள் ஆக்கிரமித்துக் கொண்டு இருக்கிறார்கள். அந்தப் பகுதியில் சந்தன மரங்களை வளர்க்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் திருப்பத்தூர், தருமபுரி பகுதிகளிலும் கோவையிலே, பெரியார் மாவட்டத்திலே சத்தியமங்கலம் பகுதியிலும் சந்தன மரங்கள் அதிகமாகக் கிடைத்து வருகின்றன. ராஜபாளையம் அருகிலும் ஓரளவிற்குச் சந்தன மரங்கள் இருப்பதாகத் தெரிகிறது. முழு அளவில் இருப்பதாகக் கண்டு பிடிக்கப்படவில்லை. சந்தன மரங்கள் இயற்கையாகவே வளர்ந்து வரும் ஒன்றாக இருந்தது. கடந்த சில ஆண்டுகாலமாகப் பயிர் செய்யும் முறையை வனத்துறை மேற்கொண்டு வருவதால், அந்த மரத்தைப் பயிர்செய்கிறபோது எந்தெந்த நிலங்களில், எந்தெந்த பகுதிகளில் அதைச் செய்ய முடியுமோ, அந்தந்த இடங்களில் அந்த மரத்தை உற்பத்தி செய்யும் முறையை வனத்துறை மேற்கொண்டு வருகிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தந்தை பெரியாரின் சுயசரிதை

*வினா எண் 420 திரு. ஏ. எம். சேதுராமன்: மாண்புமிகு செய்தி-அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பகுத்தறிவுத் தந்தை பெரியார் அவர்களின் சுயசரிதை வரலாற்றை தமிழ், ஆங்கிலம் தவிர மற்ற இந்திய மொழிகளிலும், உலக சிறப்பு மொழி ஏதாகிலும் மொழி பெயர்க்கும் எண்ணம் உண்டா?

(ஆ) இதை துரிதப்படுத்தும் முயற்சி உண்டா?